*7*

# கிறிஸ்தவ சிறப்பியல்பு

## (கொலோசெயர் 3:1–17)

*மறு உருவாக்கமான வாழ்வு என்பது கிறிஸ்தவர்கள் வாழும் வழியில் காணப்படுகிறது ...*

*உங்கள் சிறப்பியல்பு என்பது உங்களை நீங்கள் இருக்கும் வகையிலான நபராக்குகிற எண்ணப்போக்குகள் மற்றும் நடக்கைகள் ஆகியவற்றின் விசேஷித்த பொதியாக உள்ளது. அந்தக் கருத்தில், ஒவ்வொருவரின் சிறப்பியல்பும் தனிச்சிறப்புள்ளதாக இருக்கிறது. இருப்பினும் மக்களில் சிலர், மனோதத்துவ நிபுணர்கள் குறிப்பிட்ட வகையிலான பின்வரும் சிறப்பியல்புகள் பற்றிப் பேசுதலைச் சாத்தியமாக்கப் போதுமான அளவு பண்புகளைப் பொதுவில் கொண்டுள்ளனர்: வெளிப்படையானவர் மற்றும் உள்முகச்சிந்தனையாளர், உணர்ச்சிக்கு ஆளாகுபவர் மற்றும் செயலற்று இருப்பவர், அலைக்கழிக்கும் ஆளாகுபவர், கட்டாயப்படுத்துபவர் முதலியன.*

*இவ்வார்த்தைகளைக் கொண்டு விவரிக்கப்படும் மக்கள், பொதுவில் சில குறிப்பிடத்தக்க பண்புகளைக் கொண்டுள்ளனர் என்பதால் இவ்வகையான சிறப்பியல்புகளை வித்தியாசப்படுத்துதல் சாத்தியமாக உள்ளது என்றால், கிறிஸ்தவர்கள் பொதுவில் குறிப்பிடத்தக்க பண்பினங்கள் சிலவற்றைக் கொண்டிருக்கும் காரணத்தால், ஒரு கிறிஸ்தவரின் சிறப்பியல்புகளை வித்தியாசப்படுத்துதலும் சாத்தியமாகவே இருக்கலாம்.*

*இருந்தாலும் இது, எல்லாக் கிறிஸ்தவர்களும், சிறப்பியல்பின் ஒவ்வொரு அம்சத்திலும் ஒன்றுபோலவே இருப்பார்கள் அல்லது இருக்க வேண்டும் என்று கூறுவதாக இருப்பதில்லை. உயரமான மற்றும் குள்ளமான, பெரிய மற்றும் சிறிய மனிதர்கள் கிறிஸ்தவர்களாக இருப்பது போலவே, வெளிப்படையானவர் மற்றும் உள்முகச்சிந்தனையாளராக உள்ள மக்களோ அல்லது உணர்ச்சிக்கு ஆளாகுபவர் மற்றும் செயலற்று இருப்பவரோ கிறிஸ்தவர்களாக இருக்க முடியும். இருந்தபோதிலும், விசுவாசம் நிறைந்த கிறிஸ்தவர்களாக இருக்கிறவர்களை நீங்கள் கண்ணோக்கினால், அவர்கள் இந்த உலகத்தில் இருந்து குறிப்பிடத்தக்க வகையில் வேறுபட்டுள்ள சில விஷயங்களைப் பொதுவில் கொண்டிருப்பதை நீங்கள் கண்டறிவீர்கள். அவர்கள் பொதுவில் கொண்டுள்ள அந்தப் பண்பினங்களை "கிறிஸ்தவ சிறப்பியல்புகள்" என்று நாம் அழைக்கக்கூடும். அப்படிப்பட்ட சிறப்பியல்பு என்னவாக உள்ளது, மற்றும் அது எவ்வாறு மேம்படுத்தப்படக்கூடும்? மூன்று படிகளைக் கொண்ட ஒரு செயல்முறையை விவரிப்பதன்மூலம், இந்தக் கேள்விகளுக்கு, கொலோசெயர் 3:1-17 வசனப்பகுதியானது பதில் அளிக்கிறது.*

# படி ஒன்று: கிறிஸ்துவுடனான நமது உறவே நமது வாழ்வு மாற்றத்திற்கான முதன்மை நோக்கமாக உள்ளது என்பதை உணர்ந்து அறியுங்கள் (கொலோசெயர் 3:1-4)

*கொலோசெயர்கள் தேவனுக்கு எதிரான போதகர்களினால் செல்வாக்குச் செலுத்தப்படும் அபாயத்தில் இருந்தனர். பவுல், "லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக்கொள்ளைகொண்டுபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள், அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் ..." என்று கூறுகிறார் (கொலோசெயர் 2:8). இந்த போதகர்கள் புறதெய்வவணக்கத் தத்துவத்தையும் (கொலோசெயர் 2:8) யூதத்துவத்தையும் (கொலோசெயர் 2:16, 17) ஒன்றுகலந்த கலவை ஒன்றைப் போதித்திருந்தனர் என்பது உறுதி. இருப்பினும், பாவத்தின் பிரச்சனைக்கு, உலக கட்டுப்பாடுகள் என்பவையே அவர்களால் அளிக்கக்கூடிய மிகச் சிறந்தவையாக இருந்தன. கள்ளப்போதகர்களின் கட்டுப்பாடுகளை ஏற்றுக்கொள்வதற்கு எதிராகக் கொலோசெயர்களைப் பவுல் எச்சரித்தார்: "மனுஷருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின்படியும் நடந்து: தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்கிற கட்டளைக்கு உட்படுகிறதென்ன?" (கொலோசெயர் 2:20-22). அவர்கள் கிறிஸ்தவர்கள் ஆவதற்கு முன்னர், இவ்வகையான கட்டுப்பாடுகள் அவர்களின் உலக இச்சைகளைக் கட்டுப்படுத்தப் பயன்பட்டிருந்தன என்பது உறுதி.*

*இந்த முறைமைகள் செயல்விளைவு அற்றவையாக இருந்தன என்று பவுல் கூறுகிறார். அவைகள், "இப்படிப்பட்ட போதனைகள் சுய இஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும் சரீர ஒடுக்கத்தையும் பற்றி ஞானமென்கிற பேர்கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது" (கொலோசெயர் 2:20-23). விதிகளும் சட்டபூர்வமான தடைகளும் நம்மைப் பாவம் செய்வதில் இருந்து ஒருக்காலும் காக்காது. எது காக்கும்? பாவம் செய்வதை செயல் விளைவில் தடுப்பதற்குப் பயன்படுவது எது?*

*அதற்குப் பவுல் கொலோசெயருக்கு 3:14ல் பதில் அளிக்கிறார்: கிறிஸ்துவுடனான நமது உறவைப்பற்றிய அறிவு நம்மைப் பாவம் செய்வதில் இருந்து காக்கும். பவுல் பின்வருமாறு கூறுகிறார்: (1) நாம் கிறிஸ்துவுடன் உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிறோம்; ஆகவே, நாம் மேலானவற்றைத் தேடவேண்டும் (வசனம் 1). (2) நாம் மரித்திருப்பதால் மற்றும் நமது ஜீவன் கிறிஸ்துவுடனான நமது தேவனுக்குள் மறைந்திருப்பதால், நாம் மேலானவற்றில் நமது சிந்தைகளை வைக்க வேண்டும் (வசனம் 2, 3). (3) கிறிஸ்து வெளிப்படும்போது நமது வெகுமதி இருக்கும், அப்போது நாம் அவருடன் மகிமையில் வெளிப்படுவோம் (வசனம் 4). ஆகவே நாம் நமது வாழ்வில் பூமிக்குரியவற்றை மரிக்கச் செய்ய வேண்டும் (வசனம் 5).*

*பவுல் வேண்டுகோள்விடுக்கும் நோக்கம் தெளிவாக உள்ளது: நாம் கிறிஸ்துவுடன் உறவுபடுத்தப்பட்டுள்ளதால், நாம் மேலானவற்றை நாடுகிறோம். மேலானவற்றின் மீது நாம் நமது சிந்தனைகளை வைக்கிறோம். நமக்குள் உள்ள*

உலகப்பிரகாரமானவற்றை நாம் மரிக்கச் செய்கிறோம்.

கிறிஸ்துவுடனான நமது உறவு எவ்வாறு நமது வாழ்வை மாற்ற வழிநடத்துகிறது? பல விஷயங்கள் மனதிற்கு வருகின்றன: (1) நாம் கிறிஸ்தவர்கள் ஆனபோது, கிறிஸ்து நமக்கு எல்லாவற்றிலும் முக்கிய மானவர் ஆகிறார்; அவருக்கான நமது அன்பு, நாம் உலகப்பிரகாரமான விஷயங்களைக் குறைவாக அன்புசெய்கிறோம் என்று அர்த்தப்படுத்துகிறது. (2) நாம் சோதனைகளை வெற்றிக்கொள்ளக் கூடும்படிக்குக் கிறிஸ்து நம்மைப் பலப்படுத்துகிறார். (3) கிறிஸ்து நம்மை மன்னித்திருக்கிறார் என்று அறிதலானது நம்மை மீட்கப்பட்டவர்களாக நிலைத்திருக்க விரும்பச் செய்வதுடன் பாவத்தை எதிர்த்து நிற்கவும் நம்மை ஊக்குவிக்கிறது. (4) நாம் கிறிஸ்தவர்களாக இருப்பதால், நாம் உலகத்தில் இருப்பவர்கள் போல வாழ்வது நமக்குப் பொருத்தமானதல்ல என்று நாம் அறிகிறோம். (5) நமது கர்த்தர் சகல அதிகாரமும் கொண்டுள்ளதால், நாம் அவரது வார்த்தையைக் கவனித்து அவருக்கு கீழ்ப்படிய விரும்புகிறோம்; அவரது போதனைகளைப் பின்பற்றுவதன் மூலம் நாம் பாவத்தை வெற்றி கொண்டு கிறிஸ்தவ சிறப்பியல்புகளை மேம்படுத்திக்கொள்கிறோம்.

ஒருவேளை நாம், இந்த முதல் அடிவைப்பை மேற்கொள்ளாத காரணத்தினால், கிறிஸ்தவ சிறப்பியல்பை மேம்படுத்துவதில் வெற்றியற்றவர்களாக இருந்திருக்கலாம்.நாம் தவறான நோக்கங்களைச் சார்ந்து இருந்திருக்கலாம். நாம் நரகத்தைத் தவிர்க்கும் விருப்பத்தினால் மாத்திரம் முற்றிலும் ஊக்குவிக்கப்பட்டவர்களாக இருந்து நாம் நரகத்தைவிட்டு வெளியே நிலைத்திருக்க நம்மைக் காத்துக்கொள்ள வேண்டுமென்றால், புதிய ஏற்பாட்டின் அறிவுத்துதல்கள் பல விதிகளையும் முறைமைகளையும் கொண்டுள்ளது என்ற வகையில் அதைக் கண்ணோக்கியிருக்கலாம். கிறிஸ்தவத் திற்கு அப்படிப்பட்ட அணுகுமுறையானது “சுய இஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும் பற்றி ஞானமென்கிற பேர்கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது” (கொலோசெயர் 2:23). ஆனால் முடிவில், பவுல் கூறினதுபோல, “மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது.” ஒருவேளை நாம் உலப்பிரகாரமான கட்டுப்பாடுகளை மிகவும் சார்ந்திருந்து, கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதற்கான நமது நோக்கத் திற்கு, கிறிஸ்துவுடனான நமது இணைவின் மீது மிகக்கொஞ்சமாகச் சார்ந்தி ருக்கலாம்.

## படி இரண்டு: பூமிக்குரிய பண்பினங்களை மரிக்கச் செய்யுங்கள் (கொலோசெயர் 3:5-11)

“பூமிக்குரிய பண்பினங்களை” நாம் அழித்துப்போட வேண்டும் என்று பவுல் கூறுகிறார் என்பதைக் கவனியுங்கள் (வசனம் 5), அதாவது நாம் “அவற்றை விட்டுவிட வேண்டும்” (வசனம் 8), மற்றும் நாம் “பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்து போடவேண்டும்” (வசனம் 9). நாம், பாவம் நிறைந்த குணங்களை “அழித்துப்போட” வேண்டும், “விட்டுவிட” வேண்டும் மற்றும் அவற்றை “களைந்துபோட” வேண்டும். உலகப்பிரகாரமான குணங்களுடன் நீங்கள் உடன் இருக்க முடியும் என்று நினைக்காதீர்கள்! அவற்றைக்

*கொன்றுபோடுங்களை, அவற்றைக் குப்பைத்தொட்டியில் எறிந்துவிடுங்கள், அவற்றை உங்கள் வாழ்வில் இருந்து அகற்றிவிடுங்கள், அவற்றை உங்கள் பண்பில் இருந்து அழித்துப்போடுங்கள்!*

*நாம் எவற்றை அழித்துப் போடவேண்டும்?*

**இச்சையின் பாவங்களை அழித்துப்போடுங்கள்**

*"விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழிந்துப்போடுங்கள்" (கொலோசெயர் 3:5). "விபச்சாரம்" என்பது ஆங்கில வேதாகமத்தில்* "immorality" (NEB) *மற்றும்* "sexual immorality" (Phillips) *என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "அசுத்தம்" என்பது ஆங்கில வேதாகமத்தில்* "uncleanness," "dirty - mindedness" (Phillips) *அல்லது* "indecency" (NEB) *என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "மோகம்" என்பது ஆங்கில வேதாகமத்தின் மற்ற பதிப்புகளில்* "inordinate affection" (KJV), "uncontrolled passion" (Phillips) *மற்றும்* "lust" (NEB) *என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "துர் இச்சை" என்பது* "evil concupiscence" *மற்றும்* "foul cravings" (NEB) *என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.*

*நீங்கள், "விபசாரம்," "அசுத்தம்," "மோகம்" மற்றும் "துர் இச்சை" போன்ற வார்த்தைகளைக் கேள்விப்படும்போது, மனத்திற்கு வருவது என்ன? என்னால் நமது நவீன காலத்தை நினைக்காது இருக்க முடிவதில்லை.பெரிய அளவில் "விபசாரம்," "அசுத்தம்," "மோகம்" மற்றும் "துர் இச்சை" போன்ற விஷயங்கள் இல்லாத ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியை, விசேஷமாக ஒரு குழுநடன நிகழ்ச்சியை நீங்கள் கொண்டிருப்பது எப்படி? இருந்தபோதிலும், அந்த விஷயங்கள் இந்த உலகத்தைப் பண்புப்படுத்திய போதிலும், அவைகள் கிறிஸ்தவர்களைப் பண்புப்படுத்துவது இல்லை!*

*ஒருவேளை நாம், இவ்வசனப் பகுதியானது வேசித்தனச் செய்கையை மாத்திரமல்ல, ஆனால் இச்சையின் பாவத்தையும் தடைசெய்கிறது என்பதைக் கவனித்தலும் அவசியமாக இருக்கலாம். கிறிஸ்தவர் இச்சிக்கக் கூடாது! மற்றும், அவர் அல்லது அவள், தனக்குள் இச்சையை ஏற்படுத்தும் சூழ்நிலைகளை விலக்க வேண்டும் மற்றும் பிறரை இச்சைக்குள்ளாக்கும் விஷயங்களைச் செய்வதையும் விலக்க வேண்டும். இவ்விடத்தில் நாம், ஆபாச இலக்கியத்தில் இருந்து விலகியிருப்பதற்கு, இச்சையுடன் தொடர்புடைய நடனம் போன்ற நடபடிக்கைகளைத் தவிர்ப்பதற்கு, தன்னடக்கமான உடை அணிவதற்கு வல்லமை நிறைந்த ஊக்குவிப்பு ஒன்றைக் கொண்டிருக்கிறோம்.*

*ஒழுக்கவீனமான நடவடிக்கைகளையும் இச்சைநிறைந்த எண்ணங்களையும் ஏன் தவிர்க்க வேண்டும்? "அவற்றினிமித்தமாகத் தேவகோபாக்கினை வரும்" (கொலோசெயர் 3:6). நாம் சற்றுக்காலம் இப்படிப்பட்ட பாவங்களுடன் தப்பித்துக்கொண்டு விடலாம், ஆனால் கிறிஸ்து மறுபடியும் வரும்போது, தேவன் கணக்குகளைத் தீர்ப்பார். உலகப்பிரகாரமானவற்றை விதைத்தவர்கள் கோபாக்கினையை அறுப்பார்கள்!*

**பொருளாசையின் பாவத்தை நீக்கிப்போடுங்கள்**

*பவுல், "... விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப்*

பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள்" என்று கூறுகிறார் (கொலோசெயர் 3:5). இவ்வார்த்தையை பிலிப்ஸ் என்பவர் தாம் மொழிபெயர்த்த வேதாகமத்தில், "மற்ற மக்களின் பொருட்கள் மீதான இச்சை" என்று மொழிபெயர்க்கிறார். மீண்டுமாக, இந்த எச்சரிக்கை நமது உலகத்தில் விசேஷமாகத் தேவைப்படுகிறது. பேராசை அல்லது பொருளாசை என்பதே நவீன வர்த்தகத்திற்குப் பின்னால் உள்ள ஊக்குவிக்கும் சக்தியாக அடிக்கடி உள்ளது.

பவுல் பொருளாசையை விக்கிரக ஆராதனை என்று பேசுவது ஆர்வத்திற்கு உரியதாக உள்ளது. நவீன அமெரிக்காவில் விக்கிரக ஆராதனை என்பது அதிகம் வெளிப்படையாகச் செய்யப்படுவதாக இருப்பதில்லை ஆனால் இந்தியாவில் விக்கிரக ஆராதனை என்பது எல்லா இடங்களிலும் பெருமளவில் காணப்படுகிறது; [அமெரிக்காவில்] மக்கள், மரம் அல்லது கல்லினால் செய்யப்பட்ட விக்கிரகங்களுக்கு முன்னால் பணிந்து வணங்கும் வழக்கம் கொண்டிருப்பதில்லை ஆனால் இந்தியாவில் இது பொதுவான வழக்கமாக உள்ளது. ஆனால் [பொருளாசை என்ற] பின்வரும் வகையிலான விக்கிரக ஆராதனை பெருமளவில் உள்ளது: தேவன்மீதான விருப்பத்திற்கு முன்னதாக பொருள்களை சேர்த்துக் குவித்தல் என்ற விருப்பத்தை மக்கள் பெருமளவு கொண்டுள்ளனர், எனவே அவர்களின் பொருள்களே அவர்கள் கடவுளாகின்றன. அது பொருளாசையாக உள்ளது … அது விக்கிரக ஆராதனையாக உள்ளது … மற்றும் அது பாவமாக உள்ளது … மற்றும் அது நம்மீது தேவனுடைய கோபாக்கினையைக் கொண்டுவருகிறது!

### கோபத்தின் பாவங்களை நீக்கிப்போடுங்கள்

பவுல், "கோபமும் மூர்க்கமும் பொறாமையும், … இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள்" என்று கூறுகிறார் (கொலோசெயர் 3:8). நாம், "பொல்லாத எரிச்சல்" என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ள "கோபத்தை" விட்டுவிட வேண்டும். கோபம் கொள்ளுதல் என்பது எப்போதுமே தவறாக இருப்பதில்லை (எபேசியர் 4:26). ஆனால் ஒரு குறிப்பிட்ட வகையிலான கோபம் தவறானதாக உள்ளது. கோபத்தின் எந்த வகையும் தவறான செய்கைக்கு வழிநடத்தக்கூடும்! கோபத்தை விட்டுவிடுங்கள்! நாம் "மூர்க்கத்தை" விட்டுவிட வேண்டும் என்று பவுல் கூறுகிறார், இது "furious rage" ("ஆவேசமான சினம்") (Phillips) மற்றும் "passion" ("சீற்றம்") (NEB) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "பொறாமை" என்பதும் விட்டுவிடப்பட வேண்டியதாக உள்ளது. இவ்வார்த்தையை பிலிப்ஸ் என்பவர் "evil thoughts" ("பொல்லாத சிந்தனைகள்") என்று மொழிபெயர்க்கிறார். நாம் நமது பொறுமையை இழந்துவிடுவதைத் தவிர்ப்பது மாத்திரமின்றி; விரோதங்களைப் பற்றிக்கொண்டிருக்கவும்கூடாது, நமக்கு எதிராகத் தவறு செய்தவர்களுக்கு எதிராக நமது இருதயங்களில் தீய எண்ணம் கொண்டிருக்கவும்கூடாது.

### நாவின் பாவங்களை அழித்துப்போடுங்கள்

பவுல், "… உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள். ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள் …" என்று கூருகிறார் (கொலோசெயர் 3:8, 9). நாம் "தூஷணத்தை"

விட்டுவிட வேண்டும், இவ்வார்த்தை மற்ற பதிப்புகளில் "தேவதூஷணம், ... தேவனைப்பற்றிய தீமையான வார்த்தைகள்" (Phillips), "சபித்தல்" (NEB) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "உங்கள் வாயிலிருந்து அருவருப்பான வார்த்தைகள்" என்பது Phillips வேதாகமத்தில் "அசுத்தமான உரையாடல்," என்றும் NEB வேதாகமத்தில் "அசுத்தமான பேச்சு"; மற்றும் "பொய்யுரைத்தல்" என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

கிறிஸ்தவர் தமது நாவைக் கட்டுப்படுத்த, சபித்தல், அல்லது அசுத்த மான பேச்சு அல்லது பொய்யுரைத்தல் என்பவற்றால் தமது உதடுகளால் பாவம் செய்தலைத் தவிர்க்கப் பாடுபடுகிறார். அது அவரைச் சுற்றிலும் உள்ள மக்களில் இருந்து அவரை எவ்வளவாக வேறுபடுத்துவதாக இருக்கும்!

இவ்விஷயங்களைக் கிறிஸ்தவர் ஒழித்துப்போட வேண்டியது ஏன்? ஏனென்றால் இப்படிப்பட்ட வழியில் வாழுதல் என்பது உங்கள் புதிய சூழ்நிலையில் உங்களை வைத்துக்கொள்வதாக இராது. இந்தப் பாவங்களைப் பொறுத்தமட்டில் பவுல், "நீங்களும் முற்காலத்தில் அவர்களுக்குள்ளே சஞ்சரித்தபோது, அவைகளைச் செய்துகொண்டுவந்தீர்கள்" என்று கூறுகிறார் (வசனம் 7). ஆனால் நீங்கள் அவை யாவற்றையும் ஒழித்துப்போடுதல் அவசிய மாக உள்ளது.

> ... பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே. அதிலே ... வித்தியாசம் எதுவுமில்லை (கொலோசெயர் 3:9-11).

உங்கள் வாழ்வு மாறியுள்ளது! நீங்கள் இப்போது ஒரு கிறிஸ்தவராக இருக்கிறீர்கள்! அதைப் போல் வாழுங்கள்! கடந்தகாலத்தில், நீங்கள் பாவத்தின் எல்லா வகைகளினாலும் குற்றப்பட்டு இருந்தீர்கள், ஆனால் இனியும் நீங்கள் அதைப்போன்று வாழ முடியாது! மற்றும், "கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமா யிருக்கிறதால்" உங்கள் வாழ்வு இப்போது உலகத்தால் அல்ல, ஆனால் அவரால் ஆதிக்கம் செலுத்தப்பட்டதாக இருக்க வேண்டும்!

## படி மூன்று: கிறிஸ்தவப் பண்புகளைத் தரித்துக்கொள்ளுங்கள் (கொலோசெயர் 3:12-17)

உடைகளை மாற்றுதல் என்பது, கொலோசெயர் 3:12-17ல் பயன்படுத்தப்பட்டுள்ள உருவகமாக உள்ளது. ஒருகாலத்தில் நம்மைப் பண்புப்படுத்திய பண்பினங்களை அழித்துப்போட வேண்டும் என்று பவுல் கூறியிருக்கிறார்; இந்த உலகப்பிரகாரமான பண்புகள் விட்டுச்சென்றுள்ள வெற்றிடத்தை நிரப்ப, நாம் புதிய உடைகளை அணிந்துகொள்வதுபோன்று கிறிஸ்தவப் பண்புகளை அணிந்துகொள்ள வேண்டும்.

ஒரு கிறிஸ்தவராகுதல் என்பது ஒருவருடைய குடியுரிமையை ஒரு அரசில் இருந்து இன்னொரு அரசிற்கு மாற்றுதல் போன்றதாக உள்ளது (கொலோசெயர் 1:13, 14); இது மறுபடியும் பிறத்தல் போன்றதாக உள்ளது (யோவான் 3:3-5; 1 பேதுரு 2:2); இது மரித்தோரில் இருந்து உயிர்ப்பிக்கப்பட்டிருத்தல் போன்றதாக

உள்ளது (எபேசியர் 2:1). ஆனால் இது உடைகளை மாற்றுதல் போன்றதாகவும் உள்ளது. ஏசாயாவைத் தேவன், "இரட்சிப்பின் வஸ்திரங்களை"க் கொண்டு உடுத்துவித்திருந்தார் என்பதற்காக, அவர் [ஏசாயா] அகம் மகிழ்ந்தார் (ஏசாயா 61:10). ஊதாரி மகனுடைய மீட்பு ஒரு உடையை அவன்மீது உடுத்துவித்தலைக் கொண்டு அடையாளப்படுத்தப்பட்டது (லூக்கா 15:22). இயேசு, திருமண விருந்தின் உவமையில், உடைகள் மாற்றுதலை மீட்பின் அடையாளமாகப் பயன்படுத்தினார் (மத்தேயு 22:11-14). பரலோகத்தில், இரட்சிக்கப்பட்டவர்கள் வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படுவார்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 7:13, 14). கலாத்தியர் 3:27ல் நாம் பின்வருமாறு வாசிக்கிறோம்: "ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே." *நீங்கள் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்கள்.* NEB வேதாகமத்தில் கூறப்படுகிறபடி, "நீங்கள் யாவரும் கிறிஸ்துவை ஒரு வஸ்திரம் போலத் தரித்துக் கொண்டிருக்கிறீர்கள்."

கொலோசெயர் 3:1-3ல் பவுல், கிறிஸ்தவர்களின் மாற்றத்தை உயிர்த்தெழுதலுடன் ஒப்பிட்டாலும், அது உடைகளை மாற்றுவதைப் போன்றுள்ளது என்றும் அவர் கூறுகிறார்:

> ... பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு, ... புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே, தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும்; மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு (கொலோசெயர் 3:9-12)

கருத்து பின்வருமாறு உள்ளது: நீங்கள் பழைய வாழ்விற்கு மரித்திருக்கிறீர்கள்; நீங்கள் புதிய வாழ்வுக்கென்று உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிறீர்கள்; இப்போது நீங்கள், "உங்கள் உடைகளை மாற்றி" உங்கள் புதிய தரத்திற்குப் பொருத்தமானவைகளாக உள்ள புதிய உடைகளை அணிந்து கொள்ள வேண்டும்.

நாம் அணிய வேண்டிய இந்தப் புதிய உடைகளைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்:

### மற்றவர்கள் மீதான அக்கறையை அணிந்துகொள்ளுங்கள்

அந்த அக்கறையானது இரு வார்த்தைகளினால் விளக்கப்படுகிறது: முதலாவது, "இரக்கம்," இது எப்போதுமே கிறிஸ்தவரை அடையாளப்படுத்தக்கூடிய ஒரு பண்பினமாக உள்ளது! கிறிஸ்தவர் எப்போதும் மற்றவர்களைப் பற்றியும் அவர்களின் தேவைகள் பற்றியும் அக்கறையுள்ளவராக இருக்கிறார். இரண்டாவது, "தயவு" என்பது கிறிஸ்தவரை அடையாளப்படுத்த வேண்டும்! இந்த உலகம், மதிநுட்பமாக இருப்பதை, விரைவாகவும் வெட்டுதல் போன்ற எதிர்ச் செயலுடனும், மற்றவர்களை அவமானப்படுத்திச் சிறுமையாக்குவதைத் திறமையானதென்று நினைக்கலாம். இதற்கு நேர்மாறாக, கிறிஸ்தவர் எப்போதுவே தாம் சந்திக்கும் ஒவ்வொருவருக்கும் வாழ்வை சுலபமானதாக்க முயற்சி செய்கிறார்.

### தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்

இந்தக் கருத்தை இரு வார்த்தைகள் வலியுறுத்துகின்றன. முதலாவது

“மனதாழ்மை” என்பதாகும் (KJV). NEB வேதாகமம் “பணிவு” என்று கூறுகிறது. கிறிஸ்தவர், தாம் “முக்கியமானவர் என்ற வகையில்” நடந்துகொள்ளக் கூடாது. அவர், தாம் ஒரு பாவியாக இருந்து, கிருபையினால் இரட்சிக்கப்பட்டிருப்பதை, கிறிஸ்து இன்றித் தாம் ஒன்றும் இல்லை என்பதை உணர்ந்து அறிய வேண்டும். ஊழியம் கொள்வதல்ல, ஆனால் ஊழியம் செய்வதே, வாழ்வில் அவரது குறிக்கோளாக உள்ளது. இரண்டாவது “சாந்தம்” என்பதாகும். இந்த வார்த்தையை NEB வேதாகமம், “gentleness” (“மென்மை”) என்று மொழிபெயர்த்துள்ளது. சாந்தம் என்பது பவவீனம் என்பதாக இருப்பதில்லை; இது கட்டுப்பாட்டின்கீழ் உள்ள பலமாக உள்ளது. கிறிஸ்தவர் மற்ற வர்களுடன் மென்மையாக நடந்துகொள்வதன் மூலம் சாந்தத்தைச் செயல் விளக்கப்படுத்துகிறார்.

**நம்மை ஏமாற்றுகிறவர்கள் அல்லது நம்மைப் புண்படுத்துகிறவர்களைக் குறித்து ஏற்புடைய எண்ணப்போக்கை அணிந்துகொள்ளுதல்**

எதிரான சூழ்நிலைகளில் கிறிஸ்தவர் எவ்வாறு பதில்செயல் செய்கிறார் என்பதை மூன்று வார்த்தைகள் விவரிப்பதாகக் காணப்படுகிறது. முதலாவது, *பொறுமை* என்பது கிறிஸ்தவரைப் பண்புப்படுத்த வேண்டும். இவ்வார்த்தை KJV வேதாகமத்தில் “நீடியபொறுமை” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. எதிர்ப்பான சூழ்நிலையில் கிறிஸ்தவர் சகிப்புத்தன்மை கொண்டுள்ளார் என்பது கருத்தாக இருக்கலாம்; “விஷயங்கள் கடினமாகும்போது” அவர் “தமது தேவபக்தியை இழந்து” விடுவதில்லை. இரண்டாவது, *சகிப்புத்தன்மை* என்பது கிறிஸ்தவரைப் பண்புப்படுத்த வேண்டும். கிறிஸ்தவர்கள் பூரணமற்ற மக்களுடன் பழக வேண்டியிருக்கலாம். மற்றவர்கள் பலவீனமாக இருக்கின்றனர், அவர்கள் தவறுகளைச் செய்கின்றனர்; அவர்கள் பண்பில் எரிச்சல்மூட்டும் வினோதப்பழக்கங்களைக் கொண்டிருக்கின்றனர். நாம் என்ன செய்ய வேண்டும்? அவர்களுடன் கலந்துபழகி அவர்களிடம் தவறுகள் இருந்தாலும் அவர்களை அன்புகூருதல் என்பதே நாம் செய்யக்கூடிய எல்லாமுமாக இருக்கலாம். மூன்றாவது, *மன்னித்தல்* என்பது கிறிஸ்தவரைப் பண்புப்படுத்தவேண்டும்! (கொலோசெயர் 3:13). *சபையில்கூட*, உறுப்பினர்கள் ஒருவர் மற்றவரைப் பற்றி முறையிடுதல் சாத்தியமே! பின்பு என்னவாகிறது? ஒருவர் மற்றவரிடம் “தாழ்மை யாகச் செல்லும்படி” கூறுகிற மற்ற வசனப்பகுதிகளை நாம் மறக்கக்கூடாது என்றிருக்கையில், *நாம் மன்னிக்க வேண்டும்* என்பதும் அவசியமாக உள்ளது!

**எல்லார்மீதும் அன்பை அணிந்துகொள்ளுங்கள்**

பவுல், “இவை எல்லாவற்றின்மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள்” என்று கூறுகிறார் (கொலோசெயர் 3:14). அன்பு என்பது முதன்மையான ஒழுக்கரீதியான குறிக்கோளாக, மிக உயர்வான கேட்பாக, கிரீடமான மகிமையாக மற்றும் கிறிஸ்தவ சிறப்பியல்பின் தனிச்சிறந்த சாதனையாக உள்ளது. அன்பு என்பது மிகவும் முக்கியமானதாக உள்ளது. மற்றும் அன்பு என்பது “பூரண சற்குணத்தின் கட்டாக” உள்ளது. ஒருவேளை இது, மற்ற சிறப்பியல்பில் வைக்கப்படுகின்றன என்று அர்த்தப்படுவதாக இருக்கலாம். அல்லது இது, அன்பு என்பது கிறிஸ்தவர்கள் இசைவிணக்கத்தில் ஒன்றுகூடி வாசம் செய்வதைச் சாத்தியமாக்குகிறது என்று கூறுவதாக இருக்கலாம்.

**சபையைக் கட்டியெழுப்புகிற எண்ணப்போக்குகளையும் நடக்கைகளையும் அணிந்துகொள்ளுங்கள்**

தேவனுடைய மக்கள் என்ற வகையில் நமது ஒன்றுகூடிய வாழ்வைப் பற்றி மூன்று பண்புகள் பேசுவதாகக் காணப்படுகின்றன. *சமாதானமான தன்மை* என்பது கிறிஸ்தவ சமூகத்தைப் பண்புப்படுத்த வேண்டும்! (கொலோசெயர் 3:15அ). சமாதானம் என்பது தனித்தனிக் கிறிஸ்தவரின் இருதயத்தை ஆளுகை செய்ய வேண்டும். தனித்தனிக் கிறிஸ்தவர்கள் தேவனுடன் சமாதானமாக இருக்கும்போது, அவர்கள் ஒருவர் மற்றவருடனும் சமாதானமாக இருப்பார்கள். மற்றும் *நன்றியறிதல்* உள்ள தன்மை என்பது கிறிஸ்தவ சமூகத்தைப் பண்புப்படுத்த வேண்டும் (கொலோசெயர் 3:15ஆ). நாம் தனித்தனியே நன்றிநிறைந்தவர்களாக இருக்கிறோம், மற்றும் சபையானது ஆராதனையில் ஒன்றுகூடும்போது, அது நிலையாக ஒன்றுகூடி நன்றிசெலுத்துதலை வெளிப்படுத்த வேண்டும். *ஆராதனை* என்பது கிறிஸ்தவ சமூகத்தைப் பண்புப்படுத்த வேண்டும் (கொலோசெயர் 3:16). கிறிஸ்தவர்கள் தொடர்ந்து தேவனை ஆராதிக்கின்றனர். குறிப்பாகக் கிறிஸ்தவர்கள், பாடலில் தேவனைத் துதித்து ஒருவர் மற்றவருக்குப் புத்தி கூறுகிறவர்களாக இருக்கின்றனர்.

## முடிவுரை

நாம் கூறியுள்ளவற்றை, நாம் எவ்வாறு தொகுத்துரைக்க வேண்டும்? ஒரு கிறிஸ்தவ சிறப்பியல்பை விவரிக்க நாம் முயற்சிசெய்வோமாக. இவற்றில் ஒன்றை நீங்கள் கண்டால், அதை எவ்வாறு உணர்ந்து அறிவீர்கள்?

யாரேனும் ஒருவர் கிறிஸ்துவினால் இரட்சிக்கப்பட்டிருப்பதால், தம்மைக் கர்த்தருக்கு முற்றிலும் ஒப்புக்கொடுத்தார் என்று கற்பனை செய்துகொள்ளுங்கள். உலகப்பிரகாரமான விஷயங்களுக்கு மாறாக, ஆவிக்குரிய விஷயங்கள் அவரது வாழ்வில் ஆதிக்கம் செலுத்துகின்றன. அவர் தமக்காகக் கிறிஸ்து செய்துள்ளவை என்று நினைப்பதில் நேரத்தைச் செலவிடுகிறார். தாம் எப்படியிருக்க வேண்டும் என்று கிறிஸ்து விரும்புகிறாரோ, அப்படியே இருத்தல் என்பதே அவரது குறிக்கோளாக உள்ளது. அவர் தம்மைக் கிறிஸ்துவுக்குள் மூழ்கியிருப்பவராக நினைக்கிறார் மற்றும் கிறிஸ்துவுடன் மகிமையில் இருக்கும் நாளை முன்னெதிர் நோக்கியிருக்கிறார்.

அதே வேளையில், அவர் உலகப்பிரகாரமானவற்றைத் துறப்பதற்குத் தம்மால் இயன்ற அளவு மிகச்சிறப்பானவற்றைச் செய்கிறார். அவர் கிறிஸ்துவைப் போலாக முயற்சிசெய்கிறார். அவர், தயவு, இரக்கம், தாழ்மை, சாந்தம், பொறுமை, சகிப்புத்தன்மை, மன்னித்தல் மற்றும் அன்பு ஆகியவை உள்ளவராக இருக்கிறார். அவர் தமக்குள் சமாதானம் கொண்டவராக மற்றும் மற்றவர்களுடன் சமாதானம் கொண்டவராக இருக்கிறார். அவர் எப்பொழுதும் தேவனுக்கு நன்றி செலுத்துகிறார். சுருக்கமாகக் கூறினால், கிறிஸ்தவ சிறப்பியல்பைக் கொண்ட ஒரு தனிநபர், கொலோசெயர் 3:17க்குக் கீழ்ப்படியத் தம்மால் இயன்ற அளவு மிகச்சிறப்பானவற்றைச் செய்கிறார்: "வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்." நீங்கள் அதைச் செய்தால், நீங்கள் ஒரு கிறிஸ்தவ சிறப்பியல்பைப் பெறுவதில் வெற்றியடைந்திருப்பீர்கள்.